தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025

சுற்றறிக்கை எண்.20579/டி6/2021, நாள்.13.07.2021

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அனைத்து அரசு அலுவலகங்கள் 100% பணியாளர்களுடன் இயங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 364 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 03.05.2021
2. அரசாணை (நிலை) எண். 371 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 08.05.2021.
3. அரசாணை (நிலை) எண். 394 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 05.06.2021.
4. அரசாணை (நிலை) எண். 401 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 13.06.2021.
5. அரசாணை (நிலை) எண். 409 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 20.06.2021.
6. அரசாணை (நிலை) எண். 423 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 26.06.2021.
7. அரசாணை (நிலை) எண். 435 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 03.07.2021.
8. அரசாணை (நிலை) எண். 452 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 10.07.2021.

.....

கொரோனா தொற்று பரவல் காரணமாக பார்வையில் காணும் அரசாணைகள் மூலம் கொரோனா தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக தற்போது கொரோனா பரவல் கட்டுப்பாட்டிற்குள் வந்ததை தொடர்ந்து, பார்வை 6–இல் காணும் அரசாணையில் 28.06.2021 முதல், வகை 2 மற்றும் 3–ன் கீழ் வரும் மாவட்டங்களில் 100% ஊழியர்களுடன் அரசு அலுவலகங்கள் இயங்க வேண்டும் என ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை 7–இல் காணும் அரசாணையில் 05.07.2021 முதல், அனைத்து மாவட்டங்களிலும் ஒரே வகையான தளர்வுகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, அனைத்து அரசு அலுவலகங்களும் 05.07.2021 முதல் 100% பணியாளர்களுடன் இயங்கிவருகின்றன. அதனைத் தொடர்ந்து, பார்வை 8–இல் காணும் அரசாணையில் 12.07.2021 முதல் 19.07.2021 வரையிலான தளர்வுகளும் வெளியிடப்பட்டுள்ளன. எனவே தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து அரசு பொறியியற் கல்லூரிகள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசு சிறப்பு பயிலகங்கள் மற்றும் அரசு நிதி உதவிபெறும் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் அனைத்திலும் 12.07.2021 முதல் 100% பணியாளர்களும் (Teaching and Non Teaching) பணிக்கு வருகை புரிந்து பணிபுரிய வேண்டும் எனவும், பணிக்கு திரும்பாத பணியாளர்கள் மீது முதல்வர் நிலையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– க. லட்சுமி பிரியா
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

(த.பி.பா)

பெறுநர்

1. முதல்வர்கள், அனைத்து அரசு பொறியியற் கல்லூரிகள்/
   அனைத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் /
   சிறப்பு பயிலகங்கள்
2. தலைமைப் பொறியாளர், தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை.
3. அனைத்து தொழில்நுட்பக் கல்வி கோட்ட
   செயற்பொறியாளர்கள்.

நகல் :

1. இயக்குநரின் மேஜைக்கு
2. கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)
3. துணை இயக்குநர் (நிர்வாகம்)
4. உதவி இயக்குநர் (நிர்வாகம்)
5. இயக்குநரின் நேர்முக உதவியாளர்
6. அனைத்து அலகுஅலுவலர்கள்
7. அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள்
8. தொழில்நுட்ப உதவியாளர் (மதிப்பீடு –I) (இயக்கக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

13/7/21
துணை இயக்குநர் (நிர்வாகம்).

13.07.2021